# இமதுவ பிரதேச சபை

## காலி மாவட்டம்

------------------------------

01. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 பெப்ரவரி 24 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இமதுவ பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பங்கீடு செய்யும் குழவின் விதப்புரையின் அடிப்படையில் ஹபராதுவ பிரதேச சபையினால் இமதுவ பிரதேச சபைக்கு சாட்டப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டடிருந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வுத் திகதியாகிய 2011 மே 05 திகதி வரை குறிப்பிட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்ட ரீதியாக பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சாரப் பகுதிக்காக கொள்வனவு செய்திருந்த ஏணியின் பெறுமதியாகிய ரூபா 26,000 இனை வருமானச் செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) நூலகத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 29,100 இற்கான இருப்புக் கபினெட் பிழையான முறையில் நூலகப் புத்தகங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது குத்தகைக்கு வழங்கியிருந்த வாராந்த சந்தைகள் தொடர்பாக பெற்றிருந்த 25% வைப்பு ரூபா 135,087 தொகையினை இறுதிக் காலாண்டிற்காக ஈடு செய்திருந்த போதும், அந்த தொகையை வைப்புக்களில் இருந்து அகற்றி, வருமானம் எனக் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,928,950 ஆக காணப்பட்டது, அத்துடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,249,709 ஆகும்.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

காணி உறுதிகள், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள், பதிவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டு சபை அறிக்கைகள், கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் பதிவேடுகள், மீதியினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 70,297,020 தொகைக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளை கணக்காய்வின் போது திருப்திரமான சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளது.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி இலக்கம் 164 | சபையின் கணக்கு ஆவணங்கள் செயலாளரினால் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நாளாந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதில் அடங்கியுள்ள குறிப்புக்கள் பிழையற்றவை என சான்றுபடுத்தியிருக்கவில்லை. |
| (ii) | விதி இலக்கம் 180-184 | சபையின் நிதி விவகாரங்கள் தொடர்பாக செயற்படும் அலவலர்களிடமிருந்து தேவையான பிணைகள் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. |
| (iii) | விதி இலக்கம் 193 | பாதீட்டுடன் செலவு விடயங்களை ஒப்பிட்டு மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்று ஒன்று திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டு, கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | விதி இலக்கம் 203 | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உருப்படி சரிபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (v) | விதி இலக்கம் 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆண்டிற்கு ஒரு முறையேனும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி.) | |
| (i) | நி.பி. 102-110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 135 | நிதிசார் அதிகாரங்கள் எழுத்து மூலமாக சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அதற்காக பதிவடேு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி. 702(3) | கையொப்பமிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |

(இ) திறைசேரி சுற்று நிருபம்

| | |
|---|---|
| 2002 நவம்பர் 28 திகதி இலக்கம் IAI/2002/02 கொண்ட திறைசேரி செயலாளரின் சுற்று நிருபம் | கணனிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக குறிப்பிட்ட சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 1,607,017 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 2,131,834 ஆக காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

(அ) தலைவரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2010 மதிப்பீடு | 2010 உள்ள வாறான | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | 2009 மதிப்பீடு | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா ‘000 | ரூபா‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| வீத வரி மற்றும் வாடகை | 99 | 268 | 39 | 47 | 41 | 81 |
| வாடகை | 923 | 921 | - | 1,370 | 6,389 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 363 | 456 | 44 | 463 | 427 | 23 |
| ஏனைய வருமானங்கள் | 4,517 | 6,613 | - | 17,191 | 13,305 | 223 |

(ஆ) நிலுவை வருமானம் அறவீடு செய்தல்

1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 149,605 இற்கான நிலுவை வீதவரி மற்றும் ஏக்கர் வரி மற்றும் ரூபா 56,475 இற்கான சந்தை வாடகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 02 நீதிவான் நீதிமன்றங்களில் இருந்து 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு, மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 150,000 தொகைக்காக தண்டப் பணம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 3,701,135 இற்காக முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 11,611 | 12,149 | (538) | 12,775 | 12,365 | 410 |
| ஏனையவை | 5,889 | 4,714 | 1,175 | 6,480 | 4,445 | 2,035 |
| உப கூட்டுத் தொகை | 17,500 | 16,863 | 637 | 19,255 | 16,810 | 2,445 |
| மூலதன செலவுகள் | 2,000 | 6,974 | (4,974) | 6,671 | 6,147 | 524 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 19,500 | 23,837 | (4,337) | 25,926 | 22,957 | 2,969 |

2.4 மனித வள முகாமைத்துவம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்று தரம் | 03 | 01 |
| இரண்டாரம் தரம் | 11 | 11 |
| ஆரம்ப தரம் | 24 | 14 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | - | 50 |

2006 ஏப்ரல் 10 திகதிய இலக்கம் 28 கொண்ட முகாமைத்துச் சேவை சுற்று நிருபத்தின் பிரகாரம் நிரந்தர/ தற்காலிக/ அமைய/ பிரதியீட்டு/ ஒப்பந்த மற்றும் ஏனைய ஏதேனும் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படின் அதற்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரத்தை பெற வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள போதும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் சபையினால் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் ஊழியர்கள் 50 பேர் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

ரூபா 126,000 பெறுமதியான சிறு குபோட்டோ டிரக்டர் வண்டி 03 வருட காலம் கோதாகொட உப அலுவலக வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. அதே போல் டிரக்டர் வண்டியின் திருத்துவதற்காக அல்லது அகற்றுவதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.6 முகாமைத்துவ திறமையின்மை

---

வீதி விளக்கு பராமரிப்பு பணம் சபை அறவிடப்படாமை

---

மீளாய்வாண்டின் போது அதிகார பிரதேசத்தில் வீதி விளக்குகள் பொருத்துவதற்காக தேவையான உபகரணங்கள் பெறுவதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 818,641 தொகையொன்று செலவிடப்பட்டுள்ள போதும் கணக்காய்வுத் திகதியாகிய 2011 மே 05 திகதி வரை இலங்கை மின்சார சபையின் அங்கீகாரத்துடன் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகளின் எண்ணிக்கையை இனங்கண்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் மின்சார சபையில் இருந்து வீதி விளக்கு பராமரிப்பு செலவு பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை சபை தவிர்ந்து கொண்டுள்ளது.

2.7 ஒப்பந்த நிருவாகம்

---

(i) செயற்திட்டங்கள் அமுல் நடத்துவதில் தாமதம்

---

தகனசாலை நிர்மாணித்தல் மற்றும் இமதுவ வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாண வேலை இரண்டு ஒப்பந்தக்காரர்களுடன் முறையே 2007 ஆகஸ்ட் 08 திகதி மற்றும் 2007 திசெம்பர் 12 திகதி உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் 2008 பெப்ரவரி 09 திகதி மற்றும் 2008 செப்டம்பர் 12 திகதி வேலைகள் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதியாகிய 2011 மே 05 திகதி வரை இந்த நிர்மாண வேலைகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நிர்மாண வேலையின் தாமதக் காலம் முறையே 03 வருடங்கள் 03 மாதங்கள் மற்றும் 02 வருடங்கள் 08 மாதங்களும் ஆகும். நிர்மாண வேலையின் முன்னேற்றமும் மிகவும் திருப்திகரமற்ற மட்டத்தில் காணப்பட்தென அவதானிக்கப்பட்டது.

(ii) நிர்மாண வேலைகளுக்காக கிடைத்த பணத்தில் இருந்து வேறு செலவுகள் மேற்கொள்ளல்

---

மீளாய்வாண்டின் போது 02 நிர்மாண வேலைகளுக்காக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 4,427,269 தொகையில் ரூபா 2,134,111 தொகை வேறு செலவுகளுக்காக செலவிடப்பட்டிருந்ததென 2011 மே 05 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஒப்பந்த நிருவாகம்

(ஈ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு